//மிக அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.5371/ஆ4/ 2025 நாள்.07.08.2026**

**பொருள் :** பள்ளிக்கல்வி – தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர் திறனாய்வுத் தேர்வு டிசம்பர் –2025 (**TRUST EXAM**) 2026–2027 –ம் கல்வியாண்டிற்கான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டமை –தமிழ்நாடு ஊரக திறனாய்வுத் தேர்வில் 2023–2024 முதல் 2025–2026 வரை தேர்ச்சி பெற்று தற்போது 10,11,12 வகுப்பில் பயின்று வரும் தகுதியுள்ள மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வங்கி வங்கியில் நேரடியாக )IFHRMS ) மூலம் அனுப்புதல் –பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவித்தல் –சார்பு

**பார்வை :** 1.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.011744 /எம்2/இ1/2025 நாள் .09.07.2026 இப்பிரிவு கிடைக்கப்பெற்ற நாள் 14.07.2026

----

பார்வையின் காணும் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் படி தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் 2023–2024 முதல் 2025–2026 வரை தேர்ச்சி பெற்று தொடர்ந்து பள்ளிகளில் பயின்று வரும் 10,11,12 வகுப்பு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையினை வங்கி கணக்கில் நேரடியாக வழங்கிட ஏதுவாக மாணவர்களின் வங்கிக்கணக்கு விவரங்களை இத்துடன் இணைப்பில் காணும் Google Sheet –ல் 13.08.2026 அன்று மாலைக்குள் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் (TRUST) தேர்ச்சி பெற்ற ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளியில் சேரும் அல்லது ஒரு மாவட்டத்தின் பள்ளியிலிருந்து வேறொரு மாவட்ட பள்ளியில் சேரும் உதவித்தொகைக்குத் தகுதியுடைய மாணவ / மாணவியரின் விவரம் பழைய பள்ளிகளிலிருந்து புதிய பள்ளிக்கு தெரியப்படுத்தப்படவேண்டும் என்றும் மாணவ /மாணவியர்களின் பெயர் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதன் விவரத்தினை இவ்வலுவலக ஆ4 பிரிவில் சார்ந்த பள்ளியின் தலைமையாசிரியர் தெரியப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு : இதனால், உதவித்தொகைக்கு தொடர்ந்து (இடையில் நிறுத்தப்படாமல் ) பெற ஏதுவாக அமையும் )

மேலும் தமிழ்நாடு ஊரகப் பகுதி மாணவ/மாணவியர்களுக்கான திறனாய்வுத் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்போது 2026-2027 ஆம் கல்வியாண்டில் தொடர்ந்து பள்ளியில் பயிலும் தகுதியுள்ள மாணவர்களுக்கான படிப்புதவித் தொகையினை பட்டியல் மூலம் கருவூலத்தில் சமர்பிக்க வேண்டி உள்ளதால் இத்துடன் இணைப்பில் காணும் படிவத்தினை மறுநினைவூட்டிற்கு இடமின்றி 13.08.2026 அன்று மாலை 3.00 மணிக்குள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் தனி நபர் மூலம் ஒப்படைத்திட சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மீள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. **Google Sheet link–**

   https://docs.google.com/spreadsheets/d/19ue3P5QEfraVMHoK6l5SCws2eXRNoBjQs-0STd-6psE/edit?usp=sharing

2. **படிவம்**

**//ஓம்//**
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி ) தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.